# ஆரம்பப் பாடசாலை மற்றும் இரண்டாம் நிலைப் பாடசாலை மாணவர்களுக்கான எழுத்துமூல அறிக்கைகள்

## பின்புலம்

பெற்றோர்/கவனிப்பாளர்/பாதுகாவலர் என்ற முறையில் ஒவ்வொரு வருடமும் இரண்டு எழுத்து மூல அறிக்கைகளை நீங்கள் பெறுவீர்கள். உங்களது பிள்ளையின் முன்னேற்றம் எப்படி இருக்கிறது, மற்றும் உங்களது பிள்ளையின் முன்னேற்றத்திற்குப் பாடசாலைகள் எவ்வாறு உதவி செய்கின்றன என்பதை விளங்கிக்கொள்ள இந்த அறிக்கைகள் உங்களுக்கு உதவும்.

பாடங்களைத் திட்டமிட்டு, அவற்றைப் படிப்பித்து மாணவர்களது முன்னேற்றத்தினை மதிப்பிட்டு அதை அறிவிக்க ஆசிரியர்கள் 'அவுஸ்திரேலியப் பாடத்திட்ட'(Australian Curriculum)த்தினைப் பயன்படுத்துகின்றனர். அனைத்து அவுஸ்திரேலிய இளம்பிராயத்தினருக்கும் என்ன போதிக்கப்படவேண்டும், பாடசாலையில் அவர்கள் முன்னேறிவரும் காலத்தில் அவர்கள் என்னென்னவற்றைத் தெரிந்துகொள்ளவேண்டும் மற்றும் என்னென்னவற்றைச் செய்யத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதைப் பற்றிய தராதரங்களை 'அவுஸ்திரேலியப் பாடத்திட்டம்' கோடிட்டுக் காண்பிக்கிறது.

மாணவர்கள் கற்றுக்கொள்ளும் ஒவ்வொரு பாடப் பகுதியிலும் அவர்களது சாதனைகள் எபடியிருக்கவேண்டும் என்பதைப் பற்றிய தராதரங்கள் உள்ளன. ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் மாணவர்கள் மாதிரி எடுத்துக்காட்டாக என்னென்னவற்றைத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும், என்னென்னவற்றை விளங்கிக்கொண்டு அவற்றைச் செய்யத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும் என்பதைப் பற்றிய தர நிர்ணயங்களை இவை எளிய வார்த்தைகளில் விவரிக்கின்றன.

ஒவ்வொரு ஆண்டிற்கும், ஒவ்வொரு பாடத்திற்குமான தர நிர்ணயங்கள் யாவை என்பதையும், எப்போது அவற்றைச் சாதிக்க வேண்டுமென மாணவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர் என்பதையும் 'அவுஸ்திரேலியப் பாடத்திட்ட'த்தின் www.australiancurriculum.edu.au எனும் வலைத்தளத்திற்குச் சென்று வாசித்துப் பார்க்குமாறு நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள். வெவ்வேறு சாதனை மட்டங்களில் மாணவர்கள் செய்யவேண்டிய காரியங்கள் என்ன என்பதைப் பற்றிய உபயோககரமான உதாரணங்கள் இந்த வலைத்தளத்தில் உள்ளன.

## மாணவர் அறிக்கைகளுக்குத் தேவைப்படும் விடயங்கள் யாவை?

பாடசாலையில் உங்கள் பிள்ளையின் முன்னேற்றம் எப்படி இருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதற்கான ஒரு வழிதான் எழுத்து மூலமான அறிக்கைகள் ஆகும்.

பின்வரும் விடயங்களை அறிவிக்கும் எழுத்து மூலமான இரண்டு அறிக்கைகளை ஒவ்வொரு ஆண்டும் சவுத் அவுஸ்திரேலிய மாநிலத்திலுள்ள அனைத்து பாடசாலைகளும் பெற்றோர்களுக்கும் கவனிப்பாளர்களுக்கும் அனுப்பும்:

- அவர்களது பிள்ளைகள் படிக்கும் அனைத்துப் பாடங்களையும் பற்றிய அறிக்கைகள்
- இந்த அறிக்கைகள் ஐந்து புள்ளிகளைக் கொண்ட சாதனை அளவுகோலின் அடிப்படையில் அமைந்திருக்கும்
- இவை எளிய வார்த்தைகளில் எழுதப்பட்டிருக்கும்
- மாணவர்களது ஆற்றல்கள் மற்றும் அவர்களுக்கு முன்னேற்றம் தேவைப்படும் பகுதிகள் யாவை என்பதை இந்த அறிக்கைகள் அடையாளம் காட்டும்

1 முதல் 10 வரைக்குமான ஆண்டுகளில் படிக்கும் மாணவர்களுக்கான அறிக்கைகள் A-E வரைக்குமான சாதனை அளவுகோல் ஒன்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இந்த அளவுகோலோடு மாணவர்களது சாதனைகளை ஒப்பிடும்போது இதன் அர்த்தம் என்ன என்பதற்கான விளக்கம் ஒன்று உங்களுக்கு உதவும் விதத்தில் தரப்பட்டிருக்கும்.

பாடசாலைக் கல்வியைத் துவங்கும் ‘துவக்க நிலை மாணவர்க’(reception students)ளுக்கான அறிக்கைகள் அந்த ஆண்டில் மாணவர்களது முன்னேற்றம் எப்படி இருந்தது என்பதை விவரிக்கும் சொற்களைக் கொண்டிருக்கும். இந்த அறிக்கைகள் துவக்கநிலை மாணவர்களுக்கான சாதனைத் தர நிர்ணயங்களோடு ஒப்பிடப்பட்டிருக்கும்.

## ஆசிரியர்கள் எவ்வாறு மாணவர்களுக்கான தர-நிலைகளை ஒதுக்குவர்?

‘அவுஸ்திரேலியப் பாடத்திட்ட’த் தர நிர்ணயங்களின் பிரகாரம் மாணவர்களது சாதனைகளை மதிப்பீடு செய்வதற்கான பலவிதப்பட்ட யுக்திகளையும், சாதனங்களையும் ஆசிரியர்கள் பயன்படுத்துவர். இந்த ஆதாரத்தின் அடிப்படையில் மாணவர்களது சாதனை எந்தத் தர-நிலைக்கு மிகவும் ஏற்புடையதாக இருக்கிறது என்பதை முடிவு செய்ய சமநிலையான தீர்மானம் ஒன்றை ஆசிரியர்கள் மேற்கொள்வர். ஒவ்வொரு தர-நிலையையும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் தமது வகுப்பிலுள்ள மாணவர்களுக்கு ஒதுக்குமாறு ஆசிரியர்கள் எதிர்பார்க்கப்படுவதில்லை.

## எப்படிப்பட்ட வேறு மாதிரியான அறிக்கைகளைப் பாடசாலைகள் கொடுக்கும்?

பெற்றோர்-ஆசிரியர் நேர்காணல்கள் உட்பட, பல விதமான வழிகளில் உங்கள் பிள்ளையினது படிப்பைப் பற்றிப் பாடசாலைகள் உங்களுடன் தொடர்பாடல் கொள்ளும். உங்கள் பிள்ளயின் ஆசிரியரைச் சந்திப்பதற்கு இருவருக்கும் வசதியான வேறொரு நேரத்தில் நேர்காணல் வேண்டும் என்று நீங்கள் வேண்டலாம்.



Government of South Australia
Department for Education and Child Development

## A-E தர-நிலைகளின் அர்த்தம் என்ன?

'அவுஸ்திரேலியப் பாடத்திட்ட' சாதனைத் தர நிர்ணயங்களின் பிரகாரம் மாணவர்களது சாதனைகளைக் குறிக்கும் A–E தர-நிலைகளை, அல்லது இந்தத் தர-நிலைகளை விவரிக்கும் சொற்களை ஆசிரியர்கள் பயன்படுத்துவர். 'குறைந்தபட்ச' (minimal)அளவிலிருந்து 'மிகச் சிறந்த' (excellent) அளவு வரைக்குமான சாதனகளை இந்தத் தர-நிலைகள் விவரிக்கின்றன.

| | *சாதனைத் தர நிர்ணயங்களின் பிரகாரம், உங்கள் பிள்ளை.....* |
|---|---|
| *A* | *இந்த ஆண்டு மட்டத்திற்கான எதிர்பார்ப்புகளில் மிகச் சிறந்த (excellent) சாதனைகளைக் காண்பிக்கிறது.* |
| *B* | *இந்த ஆண்டு மட்டத்திற்கான எதிர்பார்ப்புகளில் நல்ல (good) சாதனைகளைக் காண்பிக்கிறது.* |
| *C* | *இந்த ஆண்டு மட்டத்திற்கான எதிர்பார்ப்புகளில் திருப்திகரமான (satisfactory) சாதனைகளைக் காண்பிக்கிறது.* |
| *D* | *இந்த ஆண்டு மட்டத்திற்கான எதிர்பார்ப்புகளில் பகுதியளவான (partial) சாதனைகளைக் காண்பிக்கிறது.* |
| *E* | *இந்த ஆண்டு மட்டத்திற்கான எதிர்பார்ப்புகளில் குறைந்தபட்ச (minimal) சாதனைகளைக் காண்பிக்கிறது.* |

- 'A' தர-நிலை என்பது, ஒரு விடயத்தைப் பற்றிய முழு அறிவையும் புரிதலையும் உங்கள் பிள்ளை பெற்றுள்ளது, மற்றும் இந்த அறிவினை பரிச்சயமல்லாத சூழ்நிலைகளில் உங்கள் பிள்ளையால் பிரயோகிக்க இயலும் என்பதைக் குறிக்கும்.
- 'C' தர-நிலை என்பது தமது கல்வியின் தற்போதைய நிலையில் எதிர்பார்க்கப்படும் விடயங்களை மாணவர் சாதிக்கிறார் என்பதைக் குறிக்கும். சாதனைத் தர நிர்ணயங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்பார்ப்புகளை வைத்துப் பார்க்கும்போது இது கணிசமானதொரு சாதனையாகும்.
- 'E' தர-நிலை என்பது குறிப்பிட்டதொரு சாதனைத் தராதரத்தினை அடைய மாணவர் இப்பொதுதான் துவங்குகிறார் என்பதைக் குறிக்கும்.

A-E தர-நிலைகளும் அவற்றோடு சேர்த்துக் கொடுக்கப்படும் கருத்துரைகளும் பெற்றோர்கள்/கவனிப்பாளர்கள்/பாதுகாவலர்களுக்கு அறிவிப்பு செய்வதற்கான ஒரு வழியாகும். பின்வரும் விடயங்களைப் பற்றிய தகவல்களும் அறிக்கைகளில் இருக்கக்கூடும்:

- மாணவர்களது ஆற்றல்கள் மற்றும் அவர்கள் முன்னேற்றம் காட்டவேண்டிய பகுதிகள்
- மாணவர்களது முன்னேற்றத்தில் உதவுவதற்கான யுக்திகள்
- கல்வியைப் பற்றிய மாணவர்களது மனப்பாங்கு மற்றும் கல்வியின் மீது அவர்களுக்குள்ள பற்றுறுதி
- மாணவர்களது சமூகத் திறன் வளர்சியைப் பற்றிய தகவல்கள்
- பாடசாலைத் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளில் ஈடுபாடு
- பாடசாலை வருகை

பாடசாலை அறிக்கைகளின் உரு-மாதிரி மற்றும் அவற்றில் உள்ளடக்கப்படும் விடயங்கள் ஆகியவற்றைப் பறிய முடிவுகளைப் பாடசாலைகள் அவர்களது சமுகத்தினரோடு கலந்துரையாடி மேற்கொள்ளும்.

## அனைத்து மாணவர்களுக்கான அறிக்கைகளிலும் A-E தர-நிலைகள் உள்ளடக்கப்படவேண்டுமா?

சில மாணவர்களுடைய முன்னேற்றமும் சாதனைகளும் அவர்களது தற்போதைய சாதனை அளவுகளை மிகச் சரியாகக் காண்பிக்கும் சாதனைத் தர நிர்ணயத்தோடு ஒப்பிடப்பட்டு அறிவிக்கப்படும். சில அல்லது அனைத்துக் கல்விப் பகுதிகளிலும் இப்படிச் செய்யப்படக்கூடும். மாறாக, தனியொரு மாணவரது கல்வித் திட்டத்தின் இலக்குகளோடு ஒப்பிடப்பட்டு அந்த மாணவரது சாதனைகள் அறிவிக்கப்படக்கூடும். மாணவருக்கான கல்வித் திட்டம் மற்றும் சில மாணவர்களுக்கான தகுந்த அறிவிப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றைப் பற்றி பெற்றோர்கள்/ கவனிப்பாளர்கள்/ பாதுகாவலர்களுடனும், தக்க வேளைகளில் மாணவர்களுடனும், மற்ற தக்க தொழிலர்களுடனும் பேச்சு-வார்த்தை ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென பாடசாலைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

உடலியலாமைகள் உள்ள சில மாணவர்கள் மற்றும் பிரதானப் பாடசாலைகளில் புதிதாய்ச் சேர்ந்திருக்கும் தகுதி பெறும் மாணவர்கள் ஆகியோரது விடயத்தில் இவ்வாறு செய்யப்படக்கூடும். 'தீவிர ஆங்கிலக் கல்வித் திட்டம்' / 'புது வருகைகள் திட்டம்' (Intensive English Language Program /New Arrivals Program (IELP/NAP)) ஆகியவற்றிலிருந்து வெளியேறிய மாணவர்களுக்கு அவர்கள் வெளியேறியதிலிருந்து ஆறு 'பருவங்கள்' (terms) வரைக்கும் A-E தர-நிலகள் கொடுக்கப்படாமலிருக்கலாம். A-E தர-நிலகளிலிருந்து மாறுபட்ட விதத்தில் தமது சாதனைகளை விவரிக்கும் அறிக்கை ஒன்றை IELP/NAP மாணவர்கள் பெறுவர்.